# ரணிலே மீண்டும் ஜனாதிபதியாக வர மொட்டு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்

## அமைச்சர் பிரசன்ன வலியுறுத்து



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் எனவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சியில் முன்னிறுத்துவதற்கு பொருத்தமான வேட்பாளர் இல்லை எனவும் ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இன்று மொட்டுக் கட்சி அலுவலகத்தில் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு கூறினார்.

அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளும் பதில்களும் வருமாறு,

கேள்வி – நாமல் ராஜபக்ஷ மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளராகப் பதவியேற்றுள்ளார். பழையவர்களை, கட்சியை விட்டு வெளியேறியவர்களை மீண்டும் வருமாறு அழைக்கின்றார். வேலை செய்ய முடியுமா?

பதில் – அவர் பதவியை ஏற்று அவரது எண்ணப்படி செயற்படுவது அவரது பொறுப்பு. அது சரியா, தவறா 2➤

மாலைக்கதிர்
Maalaikkathir


சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 15 வியாழக்கிழமை 28.03.2024 கதிர் 214




# உரிய நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும்! தேவையான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது

## தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தலை உரிய தருணத்தில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை தேர்தல் திணைக்களம் மேற்கொண்டு வருவதாக தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்நாயக்க நேற்று தெரிவித்தார்.



மேலும் அவர் தெரிவிக்கையில், முதலில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற ரீதியில், அதற்கென 10 பில்லியன் ஷரூபா நிதி தேவை என தேர்தல் ஆணைக்குழு கோரியதன் பேரில் அமைச்சிலிருந்து அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளமையால 2➤

# ஞானசார தேரருக்கு 4 வருட கடூழிய சிறை

## கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

பொதுபலசேனவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ஒரு இலட்சம் ஷரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்துளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகேவால் இந்தத் தீர்ப்பு இன்று வழங்கப்பட்டுள்ளது.

ஞானசார தேரருக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த 2➤



# அரச நிறுவனங்களில் தனியார் வாகனங்களை பாவித்தால் 20 பில்லியன்களை சேமிக்க முடியும்!

## எரிசக்தி மற்றும் போக்குவரத்து மேற்பார்வைக் குழு

அரசு நிறுவனங்களிலுள்ள வாகனங்களை நீக்கி விட்டு அந்த வாகங்களுக்கு பதிலாக தனியார் துறையினரின் வானங்களை வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் பயன்படுத்தினால், அரச செலவீனத்தில் சுமார் 20 பில்லியன் ஷரூபாவை சேமிக்க முடியும் என எரிசக்தி மற்றும் போக்குவரத்து துறைசார் மேற்பார்வைக் குழுவில் தெரியவந்துள்ளது.

அதுமட்டுமன்றி, ஒரு கிலோமீட்டருக்கு ஏற்கனவே 300 ஷரூபாய் செலவில் இயங்கும் அரசு வாகனங்களை தனியார் வாகனங்கள் மூலம் 100 ஷரூபாயாக குறைக்கலாம் என்றும் எனவும் இக்குழுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனிதவள மற்றும் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பொது வள முகாமைத்துவம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையின் தரவுகளின்படி, இந்த விபரங்களை வெளிக்கொணர முடிந்துள்ளதுடன், எரிசக்தி மற்றும் போக்குவரத்துக்கான துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் நாலக்க பண்டார கோட்டேகொட எம். பி. தலைமையில் நாடாளுமன்றத்தில் கூடிய போதே இந்த விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. 2➤

# வடக்கின் வீடற்ற மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகள் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

2➤

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் வீடற்ற மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் வகையில் சுமார் 50,000 வீடுகளை அமைப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெற்ற அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

சூரிய கலன்களின் மூலம் மின் உற்பத்தியை மேற்கொள்ளும் தனியார் நிறுவனத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான 2➤

# புத்தாண்டு காலத்தில் மதுபானம் விலை குறைக்கப்பட மாட்டாது

## கலால் ஆணையாளர் நாயகம் குணசிறி



பண்டிகைக் காலங்களில் மதுபானங்களின் விலை குறைக்கப்பட மாட்டாது என கலால் ஆணையாளர் நாயகம் எம். ஜே. குணசிறி தெரிவித்துள்ளார்.

பண்டிகை காலத்தை முன்னிட்டு மதுபானங்களின் விலையை குறைப்பதாக பல்வேறு தரப்பினரும் பேசிக்கொள்வதால், அநேகமான மது விற்பனை நிலையங்கள் மதுபானம் கொள்வனவு செய்வதை கட்டுப்படுத்தி உள்ளதை அவதானிக்க முடிவதாகவும், இதன் காரணமாக மது 2➤

# சிறுவர் தொடர்பான இணைய பாலியல் அத்துமீறல் சர்வதேச அமைப்புகளின் உதவியுடன் நடவடிக்கை

*சிறுவர்களின் ஆபாசமான காணொளிகள் மற்றும் நிர்வாணப் புகைப்படங்களை இணையத்தில் பதிவேற்றுவது தொடர்பான முறைப்பாடுகளைப் பெறுவதற்கு புதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.*

*தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் இணையத்தளத்தினூடாக இன்று முதல் இது தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும் என அதன் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.*

*இந்த அமைப்பின் மூலம் பெறப்படும் முறைப்பாடுகள் நேரடியாக இங்கிலாந்தில் உள்ள “ைவெநசநெவ றயவஉா கழரனெயவழைn”க்கு தெரிவிக்கப்படுகின்றன. அதன் பின்னர் அந்த நிறுவனம் ஊடாக குறித்த ஆபாசமான காணொளிகள் மற்றும் நிர்வாணப் புகைப்படங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.*

*முறைப்பாடுகளை விசாரித்து, சம்பந்தப்பட்ட தரப்பினர் யார் என்பதை கண்டறிந்து, சர்வதேச பொலிஸ் மூலமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.*

*கடந்த காலங்களில் சிறுவர்களின் ஆபாசமான காணொளிகள் மற்றும் நிர்வாணப் புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகியமை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.*

*(04)*

## ரணிலே மீண்டும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று சொல்ல எனக்கு உரிமை இல்லை. கட்சிக்கு நல்லது நடந்தால் அதை மட்டுமே விரும்புகிறோம்.

கேள்வி - தேசிய அமைப்பாளர் பதவி மாற்றம் குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில் -பஸில் ராஜபக்ஷ இருப்பதுதான் எனக்குத் தனிப்பட்ட முறையில் பிடிக்கும். 2015 ஆம் ஆண்டு மிகவும் கடினமான நேரத்தில் பொறுப்பை ஏற்றவர். நாங்கள் அவருடன் பணியாற்ற பழகி புரிந்துணர்வுடன் இருக்கின்றோம். புதிய நபர் வரும்போது அவருடன் இணைந்து பணியாற்ற பழகிக்கொள்ள வேண்டும். அந்தச் சவாலை பஸில் எடுத்தால் நன்றாக இருக்கும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றேன்.

கேள்வி -இந்த இக்கட்டான நேரத்தில் பஸிலால் இதை ஒன்று சேர்க்க முடியுமா?

பதில் -அரசியல் செய்யும் போது அனைத்தையும் சிந்திக்கும் திறன் கொண்டவராக இருக்க வேண்டும். அவர் அதைப் பற்றி சிந்திக்கிறார். தமது வாக்குகளை மட்டும் நினைத்தால் தேசிய அமைப்பாளராக அரசியல் செய்ய முடியாது. 2005 ஆம் ஆண்டு, பஸில் ராஜபக்ஷ திரைமறைவில் இருந்து மஹிந்தவுக்காகத் தேர்தல் பிரசாரம் செய்தார். அப்போதும் அவருடன் இணைந்து பணியாற்றினேன். அன்று முதல் இன்று வரை அவருடன் அரசியல் செய்தவன் என்ற முறையில் எனது தனிப்பட்ட கருத்தை முன்வைத்து வருகின்றேன். தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக அவர் விலகியதும், கட்சியின் அரசியல் குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

கேள்வி -தேசிய அமைப்பாளர் பதவிக்கு நாமல் ராஜபக்ஷவின் நியமனம் திருப்திகரமாக இல்லை என்பது உங்கள் கருத்தா?

பதில் -அவரால் முடியுமா, இல்லையா என்பதைக் காட்ட அவருக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். எதிர்கால முடிவுகளுடன் எடுக்கப்படும் முடிவுகளுடன் அணியை ஒன்றாக வைத்திருப்பது அவரது பொறுப்பு. பஸில் அதைச் சரியாகச் செய்தார். எமக்கு எத்தகைய பிரச்சினைகள் இருந்தாலும், அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டு செயற்பட முடிந்தது.

கேள்வி - நாமலும் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தங்களை ஆரம்பித்திருக்கின்றாரா?

பதில் - இன்னும் ஐந்திலிருந்து பத்து வருடங்களில் நாமலுக்கு வாய்ப்பு கிடைக்கலாம் என நினைக்கின்றேன். அப்போது அவர் போட்டியில் கலந்துகொள்ளும் அனுபவத்தைப் பெறலாம். அப்போது இந்த நிலையைப் புரிந்துகொண்டு தேர்தல் பணிகளைத் தொடங்கி புதிய பின்னணியை உருவாக்க அவருக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அந்தச் சவாலை ஏற்று அதை எதிர்பார்க்கலாம் என்றால், அந்தப் பொறுப்பை ஏற்று அதைச் செய்வது சரிதான்.

கேள்வி - ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் தற்போது ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு பொருத்தமான எவரும் இல்லை என நீங்கள் நம்புகிறீர்களா?

பதில் -அவ்வாறான ஒருவரின் பெயரைக் குறிப்பிடுவதற்கு எனக்குத் தெரியவில்லை.

கேள்வி -நம்பிக்கையுடன் சொல்கிறீர்களா?

பதில் -ஊடகங்களுக்கு பொய் சொல்லுவேனா? (அ)

## அரச நிறுவனங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன்படி, 2022 ஆம் ஆண்டின் புள்ளி விபரங்களின்படி, அரச நிறுவனங்களில் சுமார் 82000 வாகனங்கள் இருப்பதாகவும் அவற்றில் சுமார் 76000 வாகனங்கள் இயங்கு நிலையில் இருப்பதாகவும், சுமார் 5500 வாகனங்கள் இயங்கும் நிலையில் இல்லை எனவும் மேற்படி ஆய்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஆய்வு அறிக்கையின்படி, இயங்கும் நிலையிலுள்ள வாகனமொன்றை ஒரு கிலோமீட்டர் தூரம் செலுத்துவதற்கு ஏறத்தாழ 300 முதல் 500 ரூபாய் வரை செலவாகும் என அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும், அரச நிறுவனங்களுக்குத் தேவையான வாகனங்களை தனியாரிடம் வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டால் 100 ரூபாய் அல்லது அதற்கும் குறைவான விலையில் இந்த ஒரு கிலோமீற்றர் தூரத்தை செல்ல முடியும் என இந்த ஆய்வின் தரவுகள் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவ்வாறு, இந்த நடைமுறையை முறையாகப் பின்பற்றி அரசுக்குச் சொந்தமான வாகனங்களை அகற்றினால் அரசு செலவில் சுமார் 20 பில்லியன் ரூபாயை சேமிக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ரெம-98)

## ஞானசார தேரர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழக்கின் இரண்டு குற்றப்பத்திரங்களிலும் அவர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூரகல விகாரை தொடர்பில் முஸ்லிம் மதத்தை இழிவுபடுத்தும் வகையில் வெளியிட்ட கருத்து, தேசிய மற்றும் மத நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவித்ததாக வழக்குத் தொடரப்பட்டிருந்தது. (அ)

## வடக்கின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒப்பந்தத்தின் அடிப்படையில் குறித்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன என்றும், இதனடிப்படையில் பயனாளர்களுக்கு சுமார் 45 இலட்சம் பெறுமதியான 750 சதுர அடி விஸ்தீரணமுள்ள கல் வீடுகள் பயனாளர்களுக்கு கிடைக்கவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது. (01)

## பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்வதற்கான எந்தத் திட்டங்களும் அரசாங்கத்திடம் கிடையாது!

### வசந்த முதலிகே சுட்டிக்காட்டு

அரசாங்கம் இந்தியாவின் கைப்பொம்மையாகச் செயற்பட்டு வருகின்றது, என மக்கள் போராட்ட இயக்கத்தின் உறுப்பினர் வசந்த முதலிகே தெரிவித்துள்ளார்.

"நாடு இன்று பாரிய பொருளாதார பின்னடைவில் உள்ளது. அரசாங்கத்திடம் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்வதற்கான எந்த திட்டங்களும் கிடையாது. வெளிநாடுகளில் கடன்பெற்று அதனூடாகவே நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்கின்றனர்.

சர்வதேச நாணயநிதியத்திடம் கடன்பெற்றுள்ளனர். இன்று சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கமையவே அனைத்து திட்டங்களும் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த அரசு தேசிய வளங்களை இந்தியாவுக்கு விற்பனை செய்வது மாத்திரமல்லாது இந்தியாவின் கைப்பொம்மையாக செயற்படுகின்றது. கிளிநொச்சியில் உள்ள காணியும் அவுஸ்திரேலியாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு ஆதரவான செல்வந்தர்களுக்கு மாத்திரமே சலுகைகளை அரசாங்கம் வழங்குகின்றது. இவ்வாறான ஒருநாட்டிலேயே பொருளாதாரப் பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக ஜனாதிபதியும் மத்திய வங்கியின் ஆளுநரும் தெரிவிக்கின்றனர். ஆனால், நாட்டு மக்கள் இன்று வறுமையில் அல்லற்படுகின்றனர்" இவ்வாறு வசந்த முதலிகே தெரிவித்துள்ளார். (04)

## கொழும்பு கிராண்ட்பாஸ் டயர்க் கடையில் தீ விபத்து

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வேல்ஸ் குமார மாவத்தையில் உள்ள டயர் கடை ஒன்றில் இன்று தீவிபத்தொன்று ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக குறித்த பகுதியானது புகைமூட்டம் சூழ்ந்து காணப்பட்டது.

பற்றியெரிந்த தீயை அணைக்கும் முயற்சியில் கொழும்பு தீயணைப்புத் திணைக்களத்தில் இருந்து ஐந்து தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

இத்தீவிபத்துக்கான காரணம் மற்றும் சேத விபரங்கள் குறித்த தகவல்கள் உடனடியாக வெளியாகவில்லை.

(04)

## அடுத்த தலைமுறைக்கான பயணிகள் விமானம் ஜப்பானின் மிட்சுபிசி நிறுவனம் தீவிர முயற்சி

ஜப்பானின் பிரபல வாகன தயாரிப்பு நிறுவனமாக மிட்சுபிசி நிறுவனம், அடுத்த தலைமுறைக்கான பயணிகள் விமானத்தை உருவாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பசுமைப் புரட்சி, புவி வெப்பமயமாதல் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு உருவாக்கப்படவுள்ள இந்த விமானத்தில் கரியமில வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் ஹைட்ரஜன் எரிபொருள் இயந்திரம் பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கு முதல்கட்டமாக 33 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(04)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# உழவு இயந்திரத்தைச் செலுத்திய பெண்கள் கிளிநொச்சியில் மகளிர் தின நிகழ்வு



பெண்களால் செலுத்தப்பட்ட உழவு இயந்திர பயணத்துடன் மகளிர் தின நிகழ்வு இன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகமும், மாவட்ட மகளிர் விவகார குழுக்களின் சம்மேளனமும் இணைந்து மகளிர் தின நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன. குறித்த நிகழ்வு இன்று காலை 9.30 மணியளவில் குமரபுரம் பகுதியில் ஆரம்பமாகி இடம்பெற்றது.

உழவு இயந்திர சாரதிச் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளவுள்ள 8 பெண்கள் உழவு இயந்திரத்தை செலுத்தி நிகழ்வில் பெறுமதி சேர்த்தனர். குறித்த பெண்களிற்கு ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட விருந்தினர்கள் கைலாகு கொடுத்து உட்சாகப்படுத்தினர்.

குறித்த பெண்கள் உழவு இயந்திரத்தை செலுத்தி விழா மண்டபம் வரை சென்றதை தொடர்ந்து மண்டப நிகழ்வுகள் ஆரம்பமாயின.

நிகழ்வில், ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், யாழ் பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கோசலை மதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதை தொடர்ந்து மங்கள விளக்கேற்றப்பட்டு அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. (02)

# சுவாமி விபுலானந்தரின் 132ஆவது ஜனன தினம்

(ஹஸ்பர் ஏ.எச்)



சுவாமி விபுலானந்தரின் 132 ஆவது ஜனன தின நிகழ்வானது திருகோணமலை தி-ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

குறித்த நிகழ்வை சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டுச் சபை ஏற்பாடு செய்திருந்தது. அதன் தலைவர் கோ.செல்வநாயகம் தலைமையில் இடம் நிகழ்வு பெற்றது.

இதில் சமூக கல்விச் சேவை யாளர்களைப் பாராட்டி கௌரவிப்புக்களும் இடம்பெற்றதுடன் பாக்கு நீரிணையைக் கடந்து சாதனை படைத்த மாணவன் ஹ.தன்வந்த்தும் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இமானுவேல், பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதம குரு சோ.இரவிச்சந்திர குருக்கள், தவத்திரு அடிகளார் தென்கயிலை ஆதீனம், வலயக் கல்வி பணிப்பாளர் தினகரன் ரவி, மாவட்ட நலன்புரிச் சங்கத்தின் தலைவர் ச.குக தாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இளைஞர் யுவதிகளுக்கான வலுவூட்டல் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலகத்தில்



(எம்.ஏ.ஏ.அக்தார்)

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜனின் வழிகாட்டலில், புயுகுளுழு இன் அனுசரணையில் "இளைஞர் யுவதிகளை வலுப்படுத்தல்" என்பதற்கமைவாக - 'இளைஞர்கள் மத்தியில் வன்முறை மற்றும் தீவிரவாதப் போக்குச் சிந்தனைகள் தூண்டப்படுவதிலிருந்து தடுத்தல்' எனும் கருப்பொருளிலான செயற்திட்டத்தின் மூன்றாம் நிகழ்ச்சி, "சமூக ஒருமைப்பாட்டினூடாக இளைஞர்களுக்கான தலைமைத்துவ திறனை வலுப்படுத்தல்" எனும் தலைப்பிலான விரிவுரையாக உளவளத்துணை உத்தியோகத்தர் ரீ.எம்.எம்.ஹப்ரத் அவர்களினால் காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர், புயுகுளுழு இன் மாவட்ட செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.




# வாசல் கவிதை சஞ்சிகையின் வெளியீட்டு விழா திருமலையில்

( ஹஸ்பர் ஏ.எச் )

வாசல் வாசகர் வட்டத்தின் வெளியீடான வாசல் கவிதை சஞ்சிகை வெளியீடு எதிர்வரும் 30 ஆம் திகதி (சனிக்கிழமை) திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு, வாசல் வாசகர் வட்டத்தின் தலைவர் ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதனின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு, பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் பொன்.சற்சிவானந்தம் கலந்து கொள்ளவுள்ளதுடன், சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை மாவட்டத்தின் மூத்த எழுத்தாளர்களான திருமலை சுந்தா, கவிஞர் ஷெல்லிதாசன், கவிமணி அம்.கௌரிதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், தொடக்கவுரை மற்றும் நிகழ்ச்சி தொகுப்பினை கவிஞர் க.யோகாந்தம் வழங்கவுள்ளார்.

பிரதம ஆசிரியர் உரையினை வாசல் கவிதை சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ஊடகவியலாளர் ச.திருச்செந்தூரன் ஆற்றவுள்ளதுடன், ஈழத்து கவிதை சிற்றிதழ்களின் வரிசையில் வாசல் சஞ்சிகை என்ற தலைப்பில் கவிஞர் தி.பவித்ரன் விசேட உரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்டத்தின் மூத்த எழுத்தாளர்களான திருமலை சுந்தா, கவிஞர் ஷெல்லிதாசன், கவிமணி அம்.கௌரிதாசன் ஆகியோர் 'கலைக்கேசரி' விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாடளாவிய ரீதியில் சுமார் 30,000 சிறுவர்கள் யாசகத்தில்! பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வில் வெளியான தகவல்

நாடளாவிய ரீதியில் சுமார் 30,000 சிறார்கள் யாசகத்தில் ஈடுபடுகின்றனர் என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புள்ளியியல் மற்றும் தரவுக் கற்கைகள் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் வசந்த அத்துகோரால தெரிவித்துள்ளார். நாட்டின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் கணக்கெடுப்புகளின் மூலம் இந்த எண்ணிக்கை உறுதி செய்யப்பட்டுள்ளதாக பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "இது மிகவும் சிக்கலான ஒரு சூழ்நிலையாகும். இந்த பிள்ளைகள் பற்றிய சரியான தரவுகள் அரசாங்கத்திடம் இல்லை. சரியான தரவு கட்டமைப்பை தயாரிக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு உள்ளது. எனவே, அரசாங்கம் இதில் கவனம் செலுத்தாவிட்டால் வீதியோர சிறுவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து போதைப்பொருள் பாவனை, போதைப்பொருள் விற்பனை, திருட்டு, மோசடி, பாலியல் துஷ்பிரயோகம் போன்ற குற்றங்கள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது": என்றார்.

பெற்றோர்கள் அல்லது தற்காலிக பாதுகாவலர்கள் ஆகியோரே இந்த சிறுவர்களை இவ்வாறு யாசகம் எடுப்பது மற்றும் இதர ரீதிகளில் பணம் சம்பாதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதாக மேற்படி ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

4 முதல் 15 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் இவ்வாறு புனித ஸ்தலங்கள் போன்ற நெரிசலான இடங்களில் தனியாக அல்லது பெரியவர்களுடன் யாசகத்தில் ஈடுபடுகின்றனர்.

இவர்களில் பெரும்பாலான பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதில்லை என்பதும், சில பெற்றோர் இந்த பிள்ளைகளை கூலி வேலை மற்றும் வீதியோர வியாபாரம் போன்றவற்றில் ஈடுபடுத்துவதும் இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெம-98)



## வெளிவாரிப் பட்ட மாணவர்களது சிரமங்களைக் குறைக்க தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தரிடம் கோரிக்கை

(ஹஸ்பர் ஏ.எச்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப்பட்ட பாடநெறிகளைப் பின்பற்றும் திருகோணமலை மாவட்ட மாணவர்களது சிரமங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகஷூப் தென்கிழக்குப் பலக்லைக்கழக உபவேந்தரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து உபவேந்தருக்கு இன்று (28) அவர் அனுப்பியுள்ள கடிதத்தில்,

தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப்பட்ட மாணவர்களை வசதிப்படுத்துவதற்காக பல்கலைக்கழகத்தில் நேரடி வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. வார இறுதி நாட்களில் ஒழுங்கு செய்யப்படும் இவ்வகுப்புகள் அடிக்கடி நடத்தப்படுவதால் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் இவ்வகுப்புகளில் கலந்து கொள்வதில் பல சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.



பல்கலைக்கழகத்திற்கு வெளியே ஒரு நாள் தங்கி இருந்து வகுப்புகளில் கலந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. இன்றைய பொருளாதார நெருக்கடி காரணமாக இதனால் பலர் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, இந்த நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு நிகழ்நிலையில் (ஒன்லைன்) வகுப்புகள் நடத்த அல்லது திருகோணமலை மாவட்டத்தில் ஒரு கற்கை நிலையத்தை ஒழுங்கு படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீர்கொழும்பு மசாஜ் நிலையங்களில் கடமையாற்றிய இரண்டு பெண்களுக்கு 'எயிட்ஸ்' என கண்டுபிடிப்பு

### 53 மசாஜ் நிலையங்களில் 137 பெண்கள் கைதாகினர்

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 53 சட்டவிரோத மசாஜ் நிலையங்களில் கைது செய்யப்பட்ட 137 பெண்களில் இருவர் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், "நீர்கொழும்பு, சீதுவ மற்றும் கொச்சிக்கடை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த பெண்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணிபுரிவது என்ற போர்வையில் மசாஜ் நிலையங்களில் தொழில் புரிந்து வந்துள்ளமை பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த மசாஜ் நிலையங்களில் சேவை பெறுவதற்கென வந்த 8 இளைஞர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டதாக கூறப்படும் இரண்டு பெண்களும் மேலதிக பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்" என்றார்.

இதேவேளை, இந்த மசாஜ் நிலையத்தில் இளவயது சிறுமியொருவரும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து சட்டவிரோதமாக நடத்தப்பட்ட 35 மசாஜ் நிலையங்களை மூடிவிடவும் அவற்றின் பெயர் பலகைகளை அகற்றி விடவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ரெம-100)

## புத்தாண்டின் பின்னர் மாணவியர்க்கு 'சனிட்டரி நப்கின்' வாங்கிட வவுச்சர்!

### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

எதிர்வரும் புத்தாண்டின் பின்னர் பாடசாலை மாணவிகளுக்கு சனிட்டரி நப்கின் வாங்குவதற்கான வவுச்சர்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.



பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய, தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் உட்பட வறுமை கோட்டின் கீழுள்ள சுமார் எட்டு லட்சம் பாடசாலை மாணவியருக்கு மேற்படி சனிட்டரி நப்கின்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கென அரசாங்கத்தினால் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள நிதி சுமார் ஒரு பில்லியன் ஷரூபா எனவும், அதன்படி ஒரு வவுச்சர் அட்டையின் பெறுமதி சுமார் 1200 ஷரூபா எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-99)

## கெஹலிய உள்ளிட்ட 9 பேருக்கும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியல்

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் மருந்துகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட சந்தேகநபர்கள் 9 பேரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இன்று (28) மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார். இதன்போது, அவரதும் ஏனையோரதும் விளக்கமறியலை நீடித்து நீதிமன்று உத்தரவு வழங்கியுள்ளது. (04)

## மட்டக்களப்பு விபத்தில் மாணவன் ஒருவர் சாவு

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் இம்முறை ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவன் ஒருவர் பலியாகியுள்ளார். மேலுமொரு மாணவன் படுகாயமடைந்துள்ளார்.

பெரியகல்லாறு மயான வீதியில் மேற்படி இரு மாணவர்களும் மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்ற நிலையில் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது மின்சாரத் தூணில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர் என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெரியகல்லாறு இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த சந்திரகாந்தன் சதுஸன் என்ற 16 வயது மாணவனே சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்த மாணவன் பெரியகல்லாறு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் களுவாஞ்சிக்குடி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## தடுப்பூசி செலுத்தியபின் சுகயீனம் மாணவர்கள் மருத்துவமனையில்

*களுத்துறைப் பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் மாணவர்கள் குழு ஒன்று தடுப்பூசி செலுத்தப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

*இந்த சம்பவத்தில் 10 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நாகொட வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.*

*12 மற்றும் 13 வயதுடைய பாடசாலை மாணவர்களே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மயக்கம் மற்றும் மூச்சு விடுவதில் சிரமம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# பாலமுனையில் கடினப்பந்துப் பயிற்சிக் கூடம் எஸ்.எம். சபீஸ் அடிக்கல் வைத்து ஆரம்பித்தார்

(நூருல் /ஹுதா உமர்)

பாலமுனையில் கடினப்பந்துக் கிரிக்கட் பயிற்சிக் கூடத்துக்கான அடிக்கல்லை அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், கிழக்கின் கேடயம் அமைப்பின் தலைவருமான எஸ்.எம் சபீஸ் நேற்று நாட்டி, பணியை ஆரம்பித்து வைத்தார். அடிக்கல்லை நட்டு வைத்து இளைஞர்கள் மத்தியில் உரையாற்றிய சபீஸ், எமது இளைஞர்கள் எதிர்காலத்தில் கிரிக்கெட்டில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியான போட்டிகளில் வாய்ப்புக்களை பெறவேண்டுமானால் எல்லா ஊர்களிலும் கடினப்பந்து கிரிக்கெட் விளையாடுவதற்கான தளங்களை உருவாக்க வேண்டும்.



பாடசாலைகள் மட்டத்திலான போட்டிகளை நடாத்தி புதிய திறமையான வீரர்களை எமது பகுதிகளிலும் உருவாக்க வழிவகை செய்ய வேண்டும். அதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம்.

இன்னும் சில வருடங்களிலாவது எமது பிராந்திய இளைஞர்கள் தேசிய அணியில் இடம்பிடிக்கும் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான சிறு முயற்சி மாத்திரமே இது, என தெரிவித்தார். இந்நிகழ்வில் உலமாக்கள், கிழக்கின் கேடயம் பொருளாளர் ஏ.எல்.ருஸ்தி அஹ்மத், அதன் இணைப்பாளர் சட்டக்கல்லூரி மாணவன் முஹம்மட் அசாம், ஏ.கே. அமீர், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும், கிழக்கின் கேடயத்தின் ஆலோசகருமான சட்டமானி எஸ்.எம்.எம். ஹனீபா, செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எம்.அர்சாத், அதிபர் எம்.எஸ்.எம். றியாஸ், ஏ.எல். றமீஸ், இளைஞர் அமைப்பின் தலைவர் முஹம்மது சீத், மற்றும் அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# ராமகிருஷ்ண மிஷனால் காரைதீவில் குடும்ப சுகாதார நிலையம் திறப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை இராமகிருஷ்ண மிஷன் காரைதீவு சாரதா நலன்புரி நிலையத்தில் நாளை (29) வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு குடும்ப சுகாதார நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் நடைபெற இருக்கின்ற இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக இலங்கை ராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மாநந்தா ஜீ மகராஜ் கலந்து சிறப்பிக்கின்றார்.

இந்த நிலையமானது பொதுமக்களுக்காக முற்றிலும் இலவசமாக நடத்தப்பட இருக்கின்றது.

வாரத்தில் திங்கள் புதன் வெள்ளி ஆகிய தினங்களில் மாலை ஐந்து மணியிலிருந்து ஆறு மணி வரையான காலப்பகுதியில் இங்கு இலவசமாக சுகாதார சேவை இடம்பெற இருக்கிறது .

கல்முனை ஆதாரவைத்தியசாலை பணிப்பாளர் டொக்டர் இரா. முரளீஸ்வரனின் ஒத்துழைப்புடன்காரைதீவு வைத்தியர்கள்மற்றும் சுகாதார சேவையாளர்கள்தொண்டரடிப்படையில் இங்கு பணியாற்ற முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று (27) புதன்கிழமை மாலை உலகளாவிய ராமகிருஷ்ண மிஷன் துணை பொதுச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி



போதசாரானந்த ஜி மகராஜ் நேற்று மாலை காரைதீவு க்கு விஜயம் செய்தார் .

சாரதா சிறுமியர் இல்லத்தை பார்வையிட்டதோடு அங்கு புதிதாக திறந்து வைக்கப்பட இருக்கிற குடும்ப சுகாதார நிலையத்தையும் அவர் பார்வையிட்டார்.



# சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதிய பங்களிப்பு சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்கு கௌரவம்!

(சர்ஜ/ன் லாபீர்)

சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதிய பங்களிப்புக்கான தேசிய மட்ட அடைவை, தொடர்ந்து மூன்றாவது தடவையாகவும் சம்மாந்துறை பிரதேச செயலகம் எட்டியுள்ளது.

இதனை பாராட்டி கௌரவிக்கும் முகமாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரமவின அம்பாறை மாவட்ட செயலகத்தில் நேற்று (27) நடைபெற்ற பிரதேச செயலாளர்கள் மாநாட்டில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# வாய்ப் புற்றுநோயைத் தடுக்கும் திட்டம் திருகோணமலையில் நடமாடும் சேவை

( ஹஸ்பர் ஏ.எச் )

திருகோணமலை நகராட்சி மன்றத்தின் வேலைத்தளப்பகுதி மற்றும் சுகாதாரப் பிரிவு உழியர்களுக்கு நேற்று புதன் கிழமை (27) காலை 7 மணிக்கு நகராட்சி மன்றத்தின் வேலைத்தளப் பகுதியில் 'வாய்ப் புற்று நோயைத் தடுப்போம்!' என்ற கருப்பொருளில் கருத்தரங்கும் நடமாடும் சிகிச்சையும் இடம் பெற்றன.



இதனை திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகமும் திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிராந்திய பற்சுகாதாரப் பிரிவும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இந்நிகழ்வு பிரதம நூலகர் ந.யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் சமூக பல் வைத்திய நிபுணர் சசிதரன், திருகோணமலை பிராந்திய பல்வைத்திய நிபுணர் திருமதி. உதயலக்ஷ்மி சூரியகுமார், நடமாடும் பல் சிகிச்சை நிபுணர் கியாஸ் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்.

இந்நிகழ்வில் திருகோணமலைப் பொது நூலகத்தின் நூலக உதவியாளர்களான அ.அச்சுதன், பா.விபூஷிதன், உ.ரஜனிக்காந் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



# கொழும்பு வடக்கு ராகம போதனா வைத்தியசாலையில் எம். எச். ஓமார் விசேட கல்லீரல் நோய் சிகிச்சை நிலையம்

## ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது

(எம்.எம்.றம்ஸீன்)

இலங்கை மக்களுக்கு உயர்தர சுகாதார சேவையை வழங்குவதை உறுதி செய்வதற்காக கொழும்பு வடக்கு ராகம போதனா வைத்தியசாலையில் நிறுவப்பட்ட "எம். எச். ஓமார் விசேட கல்லீரல் நோய் சிகிச்சை நிலையம்" ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.



கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்த ஜனாதிபதியை, வைத்தியசாலையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட கல்லீரல் சத்திரசிகிச்சையின் மூலம் குணமடைந்த சிறுமியொருவர் வரவேற்றது விசேட அம்சமாகும்.

இலங்கையில் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் மத்தியில் நாள்பட்ட கல்லீரல் நோயின் பாதிப்பு அதிகரித்து வருகிறது. கல்லீரல் செயலிழப்புக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மட்டுமே பயனுள்ள சிகிச்சையாகும். இந்த சிக்கலான கல்லீரல் நோய்களுக்கான சிகிச்சைக்கு விசேட அறிவு மற்றும் விலையுயர்ந்த உபகரணங்கள் அவசியம்.

கல்லீரல் மாற்று சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்வது ஒரு நாட்டின் சுகாதாரப் பாதுகாப்பின் வளர்ச்சியின் குறிகாட்டியாகும்.

பட்டப்பின்படிப்பு பயிற்சி மையமாகவும் வடகொழும்பு கல்லீரல் நோய்களுக்கான மையம் செயற்படுவதோடு கல்லீரல் நோய்களில் உயர்தர ஆராய்ச்சியை நடத்தி இலங்கையில் கல்லீரல் புற்றுநோய் சிகிச்சையின் மிகப்பெரிய தரவுத்தளத்தையும் பேணுகிறது.

இந்த கல்லீரல் நோய் விசேட சிகிச்சை நிலையத்தை நிர்மாணிப்பதற்காக எம். எச். ஓமார் நிதியம் இரண்டரை பில்லியன் ஷரூபாய்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இது இலங்கையின் சுகாதாரம் மற்றும் கல்வி சேவைகளுக்கு இலங்கையில் தொழில் முனைவோர் வழங்கிய மிகப்பெரிய நன்கொடையாகும். எம். எச். ஓமார் இந்த நாட்டில் புகழ்பெற்ற பிராண்டிக்ஸ் குழுமத்தின் ஸ்தாபகர் ஆவார்.

பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து எம். எச். ஓமார் விசேட கல்லீரல் நோய் சிகிச்சை நிலையத்தை திறந்து வைத்த ஜனாதிபதி அதன் வசதிகளை அவதானிக்கவும் இணைந்து கொண்டார்.

இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அங்கு வைக்கப்பட்டுள்ள விசேட அதிதிகளின் நினைவுப் புத்தகத்தில் குறிப்பு ஒன்றையும் இட்டார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

ஓமார் குடும்பத்தினர் வழங்கிய தனித்துவமான நன்கொடை மற்றும் பிராண்டிக்ஸ் வர்த்தகத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்திற்கு ஆற்றிய பங்களிப்பைப் பாராட்டினார்.

கல்லீரல் மாற்று சத்திரசிகிச்சைகளுக்கு பிராந்தியத்தில் சிறந்த நாடாக இன்று இலங்கை மாறியுள்ளதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அந்த குழு நாட்டிற்கு வழங்கிய நற்பெயருக்கு நன்றி தெரிவித்தார்.

அத்துடன், இந்நாட்டில் சுகாதாரத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டம் குறித்தும் ஜனாதிபதி இங்கு கருத்துத் தெரிவித்தார்.

சிசு இறப்பு மற்றும் தாய் இறப்பு வீதங்களின் அடிப்படையில் நமது நாடு புள்ளிவிபர அடிப்படையில் சிறந்த நிலையில் உள்ளது என்றும், கொவிட் தொற்றுநோய் காலத்திலும் அதைத் தொடர்ந்து வந்த பொருளாதார நெருக்கடி காலத்திலும் இலங்கை வலுவாக முன்னேற முடிந்ததாகவும் இந்நிகழ்வில் உரையாற்றிய சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் இந்த வசதிகளுக்காக 2.5 பில்லியன் ஷரூபா பெரும் தொகையை நன்கொடையாக வழங்கிய எம்.எச். ஓமார் மற்றும் குடும்பத்தினருக்கு அவர் நன்றிகளை தெரிவித்தார்.

உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், எம். எச். ஓமாரின் பேரனும் பிராண்டிக்ஸ் குழுமத்தின் பணிப்பாளருமான ஹாசிப் ஓமார், களனிப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் நிலாந்தி டி சில்வா, சுகாதார அமைச்சின் செயலாளர் பி. ஜி. மஹிபால, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன, கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சம்பத் ரணவீர, சுகாதார அமைச்சின் அதிகாரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில்கலந்துகொண்டனர்.






## கிளிநொச்சி பாரதிபுரத்தில் பாலப் புனரமைப்பு ஆரம்பம்!



கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிளிநொச்சி பாரதிபுர செபஸ்ரியார் வீதியின் பாலம் புனரமைத்தலுக்கான அடிக்கல் நாட்டு விழா இன்று (28) இடம்பெற்றிருந்தது.

குறித்த நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் யாழ் மாவட்ட தாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன், ஒப்பந்ததாரர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம மக்கள் மற்றும் வீதி அதிகார சபை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேச துரை சந்திரகாந்தனால் பாலம் புனரமைப்புக்கான திரை நீக்கம் செய்யப்பட்டு பின் பாலப் புனரமைப்புக்கான அடிக்கல்லும் நாட்டி வைக்கப்பட்டது.

குறித்த பாலமானது ஒரு கோடியே 53 இலட்சம் நிதிப் பங்களிப்பில் 90நாட்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்மடு நகர் பகுதியில் அமைந்துள்ள மூலிகைப் பண்ணையின் பிரதான வீதியினை புனரமைப்பதாகவும் அதற்குரிய நிதியினை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் மேலும் பல சிறிய பாலங்களையும் புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கையினை உடன் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்ததுடன், இப்பகுதிகளில் உள்ள பல கிராம வீதிகளை புனரமைப்பு செய்வதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுடன் கலந்துரையாடயிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தமண பிரதேச செயலகத்தின் புதிய கணக்காளர் பொறுப்பேற்பு

அம்பாறை மாவட்டத்தின் தமண பிரதேச செயலகத்தின் கணக்காளராக ஏ.ஜி.ஏ. அர்கம் கடந்த 26 ஆம் திகதி கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கை கணக்காளர் சேவை தரம் (3) க்கு பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளமைதயடுத்து, பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் தமண பிரதேச செயலகத்தின் கணக்காளராக அவருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவத்தில் பட்டக் கல்வி மற்றும் அதே துறையில் முதுமாணி பட்டத்தினையும் அவர் பூர்த்தி செய்துள்ளார்.

மேலும் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்திலும் சிறப்பு பட்டம் பெற்றுக் கொண்டுள்ள இவர், பட்டயக் கணக்காளர் முகாமைத்துவ நிறுவன பட்டப்படிப்பு மற்றும், இணைந்த முகாமைத்துவ பட்டயக் கணக்காளர், முகாமைத்துவ உலகளாவிய பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.03.2024இல் வெளியிடப்பெற்றது.